# யூன் – 18 – செவ்வாய்

## தூய ஜீலியானா பல்கொனேரி

## நான் உயிரோடு உள்ளளவும் ஆண்டவரைப் போற்றிடுவேன்: திபா. 146:2

---

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 8 : 1 - 9

சகோதர சகோதரிகளே, மாசிதோனியத் திருச்சபைகளுக்குக் கடவுள் கொடுத்த அருளைப்பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம். அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களால் கடுமையாகச் சோதிக்கப்பட்டபோதும் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் வறுமையில் மூழ்கி இருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள். அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்குத் தாங்களாகவே கொடுத்தார்கள். ஏன், அளவுக்கு மீறியே கொடுத்தார்கள். இதற்கு நானே சாட்சி. இறைமக்களுக்குச் செய்யும் அறப்பணியில் பங்குபெறும் பேறு தங்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக அவர்கள் தங்களை முதன்மையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்கள் நாங்கள் கடவுளின் திருவுளப்படி செயல்படுவதால், எங்களுக்கும் தங்களை அர்ப்பணித்தார்கள். எனவே இந்த அறப்பணியைத் தொடங்கிய தீத்துவே அப்பணியை முடிக்க வேண்டும் என நாங்கள் அவரை வேண்டிக் கொண்டோம். நம்பிக்கை, நாவன்மை, அறிவு, பேரார்வம் ஆகிய அனைத்தையும் மிகுதியாய்க் கொண்டிருக் கிறீர்கள். எங்கள் மேல் நீங்கள் கொண்டுள்ள அன்பும் பெருகிக்கொண்டு வருகிறது. அதுபோல் இந்த அறப்பணியிலும் நீங்கள் முழுமையாய் ஈடுபட வேண்டும். நான் இதை உங்களுக்கு ஒரு கட்டளையாகச் சொல்லவில்லை. மாறாக, பிறருடைய ஆர்வத்தை எடுத்துக் காட்டி உங்கள் அன்பு உண்மையானதா எனச் சோதிக்கவே இவ்வாறு செய்கிறேன். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்.

**பதில்பாடல் :** என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு.

## நற்செய்தி : மத்தேயு 5 : 43 – 48

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது :"உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக, "பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக" எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள்.ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்."இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா?ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" என்றார்.

**தியானம்:** இன்றைய வாசகத்தில் நம் விண்ணக தந்தை நிறைவுள்ளவராக இருக்கின்றார் என்றால் பொருள் என்ன? மத்தேயு நற்செய்தயில் வருகின்ற இக்கூற்றுக்கு இணைக் கூற்றாக லூக்கா நற்செய்தியில் வருவதைக் கருதினால் கடவுளின் "நிறைவு" எதில் அடங்கியிருக்கின்றது என்பது பற்றித் தெளிவு கிடைக்கின்றது. "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவராக இருங்கள்" என்பது லூக்கா தருகின்ற பாடம். இந்த இரு பாடங்களையும் இணைத்து பார்க்கும் போது கடவுள் நிறைவுள்ளவராய் இருக்கின்றார் என்பதும், கடவுள் இரக்கம் உள்ளவராய் இருக்கின்றார் என்பதும் ஒரே பொருள் தருகின்ற கூற்றுக்களே என்பதை அறியலாம். எனவே நாமும் நம் விண்ணக தந்தையைப் போல நிறைவுள்ளவர்களாய் மாற வேண்டும் என்றால் கடவுளின் காணப்படுகின்ற அதே இரக்கப் பண்பு நம் வாழ்விலும் காணப்படவேண்டும். கடவுள் ஒரு சிலருக்கு இரக்கம் காட்டி வேறு சிலருக்கு இரக்கம் காட்டாமல் இருப்பவரல்ல. நல்லவரானாலும் சரி தீயவரானாலும் சரி எல்லா மனிதருமே கடவுளிடமிருந்து இரக்கம் பெறுவர். நாமும் நண்பர் என்றும் பகைவர் என்றும் வேறுபடுத்திப் பார்க்காமல் அனைத்து மனிதரையும் அன்போடு அரவணைத்து அவர்கள் மட்டில் இரக்கம் காட்டினால் நம்மிடத்திலும் கடவுளின இரக்கம் குடிகொள்ளும் இதுவே நாம் இறைவனிடமிருந்து பெறுகின்ற அழைப்பு என்பதனை நம் வாழ்வில் ஏற்று வாழ்வோம் ஆமென்.